## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## CC. No. 220/2023

2025-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு **சாட்சி-2 (PW-2)**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திரு.M.இளையராஜா** மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | பால்ராஜ் | வயது | : | 70 |
| த/பெ. (அ) க/பெ. | : | **பக்கிரிசாமி** | தொழில் | : | **பாத்திர கடையில் வேலை** |
| ஊர் | : | **நாச்சியார்பட்டி** | சமயம் | : | |

**14.05.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் நாச்சியார்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பூதலூரில் உள்ள அ.சா.1ன் சாமி பாத்திரக்கடையில் வேலை பார்க்கிறேன். கடந்த 17.07.2019 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் அ.சா.1 ன் கடையை பூட்டிவிட்டு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். 02.09.2019 ஆம் தேதி காலை 08.00 அளவில் கடையை திறந்தேன். டேபிள் சேர் கலைந்திருந்தது. கடையில் அடுக்கி வைத்திருந்த பித்தளை குத்துவிளக்கு, செம்பு, தோண்டி, காமாட்சி விளக்கு, குடம், உள்ளிட்ட சுமார் ரூ.35,000/- மதிப்புள்ள பொருட்களும், கல்லாவில் வைத்திருந்த ரூ.25,000/- ரொக்கமும் காணாமல் போயிருந்தது. அ.சா.1 க்கு போன் செய்தேன். வந்து கடையை பார்த்தார் காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: -**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால். குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது,

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No. 220/2023</u>

2025–ம் ஆண்டு மே மாதம் 14–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு **சாட்சி–1 (PW– 1)**–ன் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திரு.M. இளையராஜா** மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | முருகேசன் | வயது | : | 54 |
| த/பெ. (அ) க/பெ. | : | **சிதம்பரம்** | தொழில் | : | **சுயதொழில்** |
| ஊர் | : | **திருச்சி** | சமயம் | : | |

<u>14.05.2025</u>
<u>எதிரி ஆஜர்.</u>
<u>முதல் விசாரணை</u>

1) நான் திருச்சியில் வசித்து வருகிறேன். நான் பூதலூரில் பாத்திரக்கடை வைத்து இருக்கிறேன். கடந்த 17.07.2019 ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் எனது கடையை பூட்டிவிட்டு திருச்சிக்கு சென்றுவிட்டேன். 1 1/2 மாதம் கடைக்கு லீவ் விட்டிருந்தேன். 02.09.2019 ஆம் தேதி எனது கடையில் வேலை பார்க்கும் பால்ராஜ் என்பவர் கடையை சுத்தம் செய்வதற்காக மாலை 05.00 மணியளவில் கடையை திறந்துள்ளார். கடையெல்லாம் அலங்கோலமாக இருப்பதாகவும், கல்லா திறந்து இருந்ததாகவும், பணம் வைத்திருந்த பை வெளியில் கிடந்ததாகவும் பார்த்துவிட்டு எனக்கு போன் செய்து சொன்னார்.

2) நான் கடைக்கு வந்தேன். கடையில் மேல் ஓடு திறந்து அதற்கு கீழ் போட்டிருந்த பிளைவுட் சீட் அகன்று இருந்தது. கடையில் திருட்டு நடந்திருந்தது தெரிந்தது. எனது கடையில் பித்தளை குத்துவிளக்கு, தோண்டி, காமாட்சி விளக்கு, குடம், உள்ளிட்ட சுமார் ரூ.35,000/– மதிப்புள்ள பொருட்களும், பேக்கில் வைத்திருந்த ரூ.25,000/– ரொக்கமும் காணாமல் போய்யிருந்தது. இது குறித்து பூதலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3)** இப்போதில் இருந்து சுமார் 6 மாதத்திற்கு முன்பு போலீசார் திருடப்பட்ட பொருட்களை கண்டுபிடித்ததாக போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பொருட்களை அடையாளம் காண்பித்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பொருட்கள் தான் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்ற எனது கடையின் பொருட்கள்.

**(களவாடபட்ட பொருட்களின் புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகவும் அதன் குறுந்தகடு அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** காணாமல் போன பணம் கிடைக்கவில்லை.

4) எனது கடையின் பொருட்கள் மற்றும் பணத்தை திருடிய நபர் பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை தாமாக முடித்து வைக்கப்படுகிறது,

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.